



திருப்பத்தூரில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் அமையவுள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்திற்கு நெடுஞ்சாலை மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அடிக்கல் நாட்டி பேசினார். மாவட்ட ஆட்சியர் சிவ.சௌந்தரவல்லி, அ.நல்லதம்பி எம்.எல்.ஏ., எஸ்.ராஜேந்திரன், ஆர்.எஸ்.ஆனந்தன் மற்றும் மாவட்ட, நகர ஒன்றிய நிர்வாகிகள் உடன் உள்ளனர்.




கடலூரில் பல்வேறு விழாக்களில் பங்கேற்ற கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் – வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் நினைவுப் பரிசு வழங்கினார்.

### தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு ரூ.2000 கோடி கல்வி நிதி வழங்க மறுப்பு!

# முதலமைச்சரின் சிறப்புத் திட்டத்திற்கு ரூ.10 ஆயிரம் வழங்கிய சிறுமி!

### கடலூரில் பொதுமக்கள் – ஆசிரியர்கள் – மாணவர்கள் சிறுமியைப் பாராட்டினர்!

**கடலூர், பிப். 24-**

**தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு ரூ.2152 கோடி கல்வி நிதி வழங்க மறுப்பு தெரிவிக்கும் நிலையில், முதலமைச்சரின் சிறப்பு திட்டத்திற்கு ரூ.10 ஆயிரத்தை கடலூரைச் சேர்ந்த எல்.கே.ஜி. படிக்கும் மாணவி நன்முகை வழங்கினார். இச்சிறுமியின் செயலை கடலூர் மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் வெகுவாக பாராட்டினர்.**

எல்.கே.ஜி. வகுப்பு படிக்கின்ற கடலூர் மாவட்டத்தை சார்ந்த நன்முகை என்ற சிறுமி ஒன்றிய அரசு தர மறுத்த 2000 கோடி ரூபாய்க்கு, தன் பங்களிப்பாக தனது சேமிப்பிலிருந்து ரூபாய் 10000ஐ தமிழ்நாடு முதல்வர் அவர்களின் சிறப்புத் திட்டத்திற்காக நிதி அளித்துள்ளார்என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



இக்குழந்தையின் பெற்றோர்,மருத்துவர்கள் டாக்டர் பால.கலைகோவன், டாக்டர் கிருஷ்ணப்பிரியா ஆவர். இச்சிறுமியின் தாத்தா பாலசுப்பிரமணியன் (தமிழ் ஆசிரியர், தலைமை ஆசிரியர் ஓய்வு, உளுந்தூர்பேட்டை அரசு உயர்நிலைப்பள்ளி), பாட்டி சாந்தி, (தமிழ் ஆசிரியை) உதவி தலைமை ஆசிரியர், (கோட்டக்குப்பம்), இவருடைய பெரியம்மா Dr. கல்பனா, ph D Gold medalist (தமிழ்) அரசு கலைக்கல்லூரி , விருத்தாச்சலம்,

இச்சிறுமிக்கு 4 வயது ஆகிறது. கடலூர் அரிஸ்டோ ப்பளிக் பள்ளி LKG படித்து வருகிறார்.

இச்சிறுமியின் இச்செயலை அப்பகுதியில் சேர்ந்த பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்களும் பாராட்டினர். அச்சிறுமி தன் மழலை மொழியில் பேசுகையில் ஒன்றிய அரசு படிப்புக்காக பணம் கொடுக்கவில்லை. அதனால் கல்விக்காக முதல்வர் அவர்களின் சிறப்பு திட்டத்திற்காக எனது சேமிப்பு பணத்தை மகிழ்ச்சியுடன் வழங்கினேன் என சிறுமி நன்முகை கூறினார்.



அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கில் நடைபெற்ற விழாவில் திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய சுயமரியாதை இயக்க வரலாறு – இரண்டு பாகங்கள் நூலை திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி அவர்கள் வெளியிட கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. பெற்றுக் கொண்டார். விழாவிற்கு தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் தலைமை வகிக்க பேரவைத் தலைவர் கி.நடராசன் வரவேற்றுப் பேசினார். நூல் ஆசிரியர் க.திருநாவுக்கரசு அவர்கள் அறிமுக உரை நிகழ்த்தினார். இவ்விழாவில் திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. , திராவிடர் கழக பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அ.அருள்மொழி ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர். திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் ச.பிரின்ஸ் என்.ஆர்.எஸ்.பெரியார் இணைப்புரையாற்றினார். நக்கீரன் பதிப்பகம் தி.சிற்றரசு நன்றி கூறினார்.

### அன்னைத் தமிழைக் காக்க – ஆதிக்க இந்தியைத் திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து – நாளை (பிப்.25)

# மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு - தி.மு.க. மாணவர் அணி சார்பில் பேரணியுடன் கூடிய மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

**சென்னை, பிப்.24–**

**அன்னைத் தமிழைக் காக்க, ஆதிக்க இந்தியைத் திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து பிப்ரவரி 25 அன்று, மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு (**Federation of Students Organisation – Tamil Nadu) **மற்றும் தி.மு.க. மாணவர் அணி சார்பில், பேரணியுடன் கூடிய மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது என மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டின் கல்வி கட்டமைப்பைச் சிதைக்கும் உள்நோக்கத்துடனும், ஆதக்க இந்தியைத் திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, கடந்த 21.02.2025 அன்று நடைபெற்ற மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு - தமிழ்நாடு (FSOTN) கூட்டமைப்பின் பொறுப்பாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையிலும், கழக மாணவர் அணியின் மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலும் முதற்கட்டப் போராட்டமாக, மொழிப் போருக்கு வித்திடும் வகையில் செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, நாளைய தினம் (25.02.2025) தமிழ்நாடு மற்றும் புதுவை உள்ளிட்ட ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் உள்ள முக்கிய நகரங்களில் "பேரணியுடன் கூடிய மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெற உள்ளது.

தாய் மொழியாம் தமிழ் மொழியைக் காக்கின்ற வகையில், நமது கண்டனத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கு உணர்த்தும் வகையிலும், ஒன்றிய அரசைக் கண்டித்தும், ஒன்றிய அரசின் அலுவலகங்களின் முன்பு பேரணியுடன் கூடிய ஆர்ப்பாட்டத்தை, மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்புதமிழ்நாடு (FSOTN) கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள மாணவர் அமைப்புகளின் நிர்வாகிகளுடன் கலந்துபேசி ஒருங்கிணைந்து, மாணவர் அணியின் நிர்வாகிகள், தமிழ் மாணவர் மன்ற நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர்களுடன் பெருந்திரளாக பேரணி சென்று ஆர்ப்பாட்டத்தை மாபெரும் எழுச்சியாக நடத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கழக மாவட்டத்தில் உள்ள கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகளோ, மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு - தமிழ்நாடு (FSOTN) கூட்டமைப்பில் உள்ள மாணவர் அமைப்புகளின் மாநில நிர்வாகிகளையோ சிறப்பு அழைப்பாளர்களாக அழைத்து, கண்டன ஆர்ப்பாட்டத்தில் சிறப்புரையாற்றுகிற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

ஆர்ப்பாட்டத்தின் போது, சர்வாதிகாரப் போக்கோடு செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டிற்கு நிதி தராமல் கல்வியைச் சிதைக்கின்ற படுபாதகச் செயலில் ஈடுபட்டு வருவதையும், தொன்மை வாய்ந்த நம் தமிழ்மொழியை அழிக்க வேண்டுமென்ற பா.ஜ.க.வின் தீய நோக்கத்தை பொதுமக்களிடம் எடுத்துரைக்கும் வகையிலும், யு.ஜி.சி. வரைவுக் கொள்கையைத் திரும்பப் பெற வலியுறுத்தியும், மும்மொழிக் கொள்கையைத் திணிக்கும் தேசியக் கல்விக் கொள்கையைத் திரும்பப் பெற வலியுறுத்தியும் முழக்கங்களை எழுப்பி, ஆர்ப்பாட்டத்தை மிக எழுச்சியுடன் நடத்திட வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### பிப்.26 அன்று நடைபெறுகிறது! திருமதி துர்கா ஸ்டாலினின் கார் ஓட்டுநர் –

# கழக முன்னோடி என்.ஆனந்த் புதல்வி ஏ.நித்யா - ஏ.ஜி.மகேஷ் மணவிழா!

### கழக முன்னணியினர் – தோழர்கள் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்!

*சென்னை, பிப்.24-*

கழக முன்னோடியும், திருமதி துர்கா ஸ்டாலின் அவர்களின் கார் ஓட்டுநருமான என்.ஆனந்தன் புதல்வி ஏ.நித்யா (எ) யோகிதா மணவிழா, பிப்.26 அன்று, சென்னை - ஷெனாய் நகரில் நடைபெறுகிறது.

கழக முன்னணியினர், தோழர்கள் பலரும் மணவிழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.



இம்மணவிழா பற்றி விவரம் வருமாறு :

கழக முன்னோடியும், திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்களின் கார் ஓட்டுநருமான என்.ஆனந்தன் - திருமதி. ஏ.தேவிகா ஆகியோரின் புதல்வி ஏ.நித்யா (எ) யோகிதாவுக்கும் - சென்னை, முகப்பேர் - வி.கோபிநாத் - திருமதி. ஜி.தேவி ஆகியோரின் புதல்வர் ஏ.ஜி.மகேஷுக்கும் திருமணம், 26.2.2025 - புதன்கிழமை அன்று காலை 9.30 மணியளவில், சென்னை - பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை - ஷெனாய் நகர் - அய்யாவு மஹாலில் நடைபெறுகிறது.

மணவிழாவில் - திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

மேலும் - கழக முன்னணியினர், தோழர்கள் பலரும் இம்மணவிழாவில் கலந்து கொண்டு வாழ்த்துகிறார்கள்.

முன்னதாக, நாளை (25.2.2025 - செவ்வாய்க் கிழமை) மாலை 7.00 மணியளவில், மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.






பல்லாவரம் வடக்கு பகுதி கழக செயற்குழு கூட்டம் கீழ்கட்டளையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினரும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி கலந்துகொண்டு மார்ச் 1அன்று தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை பகுதி முழுவதும் சீரோடும் சிறப்போடும் எவ்வாறு கொண்டாடுவது என்பதைக் குறித்து ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார். அப்பொழுது பகுதி கழகச் செயலாளர் மண்டலத் தலைவருமான இ.ஜோசப் அண்ணாதுரை. மு.ரஞ்சன், மு.நாகலிங்கம், க.ரமேஷ், ச.சிவக்குமார், கோ. ஜானகிராமன், வ. முத்து, எஸ்.நெடுஞ்செழியன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், மாநகர பிரதிநிதிகள், வட்டக் கழக செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# மதுரை மேற்கு தொகுதியில் பல்லாயிரவர் திரண்ட கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!





மதுரை வடக்கு மாவட்டம் மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதி கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் விளாங்குடி கலைஞர் திடலில் மாநாடு போல் நடைபெற்றதில் மாவட்ட செயலாளர்,வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். மேலும் இக்கூட்டத்தில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. கழக நிர்வாகிகள் பொன் முத்துராமலிங்கம், வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, தனச்செல்வம், ஜி.பி.ராஜா, ஜெயராம், மேயர் இந்திராணி பொன்வசந்த், எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியன், சோமசுந்தர பாண்டியன், டாக்டர்.திலீப் ராஜகண்ணப்பன், சௌந்தர்ராஜன், அன்பழகன், மதிவெங்கடேஷ், சுதன், காவேரி, தவமணி, ஆர்.கே.ஜெயராமன், ராஜாமணி மற்றும் கழக நிர்வாகிகள், பங்கேற்றனர்.